அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :146/2016
தேதி. :15/09/2016

# மாண்புமிகு புரட்சி தலைவி அவர்களின் அறிவுறுத்தலின்படி காவிரி பிரச்சனைக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை

காவிரி நதிநீர் பிரச்சனையில் கர்நாடக அரசு தமிழர்களை தொடர்ந்து அவமானப்படுத்துவதும், தமிழர்களின் மீதான வன்முறை தாக்குதலும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இதனால் ஏற்பட்டுள்ள வர்த்தக இழப்பு சுமார் ரூ.2500 கோடியை மத்திய அரசு, கண்காணிப்பு குழு அமைத்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் இழப்பீட்டிற்கான நஷ்ட ஈடு வழங்க வேண்டும். மேலும் வீட்டுக்கொரு விவசாயியை உருவாக்க வேண்டும் என்பதை இயக்கத்தின் அடிப்படை கொள்கையாக கொண்டு செயல்படும் நான் பல ஆண்டுகளாக பல்வேறு கூட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும் அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்கி அதன் பின் தண்ணீரை மாநிலங்களுக்கு வரையறுத்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன். தற்போது இத்தகைய கோரிக்கைகளை முன்னிறுத்தி நாளை (16/09/2016) தமிழகம் முழுவதும் முழு அடைப்பு போராட்டம் நடைபெற உள்ளது.

தமிழகத்தில் உள்ள கட்சிகளும், மேலும் சில அமைப்புகளும் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், நாளை போராட்டத்தில் பாதுகாப்பு பணிக்காக 1 இலட்சத்து 18 ஆயிரம் போலிசார் ஈடுபடுத்த தமிழக அரசு முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது ஆகும். முன்னோர்களின் வாக்குப்படி **“வன்முறை நன்முறையுமல்ல, நம்முறையுமல்ல”** என்பதை மனதில் கொண்டு, மக்களின் பாதுகாப்பை முன்னிறுத்தி போராட்டம் அமைதியான முறையில் நடைபெற அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சி தலைவி அவர்களின் அறிவுறுத்தலின்படி காவிரி நதிநீர் பிரச்சனைக்கு உடனடியாக நிரந்தர தீர்வு காண மேலும் மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**